முழுப் பதிப்புரிமையுடையது / සියලුම හිමිකම් ඇවිරිණි / All Rights Reserved

**வடமேல் மாகாண கல்வித்திணைக்களம்**

**Provincial Department of Education - NWP**

**இரண்டாம் தவணைப் பரீட்சை - 2023**

**தரம் : 10**

சுட்டெண்.........................................

**கணிதம் / ගණිතය - I**

நேரம்:2 மணித்தியாலம்


- **எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.**
- **பகுதி A இல் சரியான விடைகளுக்கு 2 புள்ளிகள் வீதமும், பகுதி B இல் சரியான விடைகளுக்கு 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.**

## பகுதி - A

1. வீடொன்றின் வருட மதிப்பிட்டுப் பெறுமதி ரூபா 30 000 ஆகும். அவ்வீட்டிற்காக 15% வருட வரி செலுத்த வேண்டுமாயின் காலாண்டுக்காக செலுத்த வேண்டிய வரித்தொகையயைக் காண்க.

02. காரணிப்படுத்துக. $x^2 - 64$

03. உருவில் தரவுகளைப் பயன்படுத்தி, $x, y$ ஆகியவற்றின் பருமன்களைக் காண்க.





04. கீழே அட்சரகணித கோவைகளின் பொது மடங்குகளுட் சிறியதைக் காண்க.

$2x^2,\ 4xy^2,\ 5x^3y$


05. சுருக்குக். $\dfrac{1}{2x} - \dfrac{2}{5x}$

06. உருவில் தரவுகளுக்கு ஏற்ப ஒருங்கிசையும் முக்கோணி சோடியொன்றை குறிப்பிடுக. அது ஒருங்கிசையும் சந்தர்ப்பத்தையும் குறிப்பிடுக.




07. ( 4, 6 ), ( 2, 2 ) எனும் புள்ளிகளினூடாகச் செல்லும் நேர்கோட்டின் படித்திறனைக் காண்க?

08. றியாஸ் தனது சம்பளத்தை செலவு செய்த விதம் வட்டவரைபில் காட்டப்பட்டுள்ளது. அவர் உணவுக்காக செலவு செய்த பணம் வேறு செலவின் எத்தனை மடங்கு எனக் காண்க.





09. ABCD என்பது ஒரு இணைகரமாகும்.
$C\hat{B}E = 70^0$ ஆகும்.
a+b இன் பெறுமானத்தைக் காண்க





10. தீர்க்க. $x(x-1)=0$

11. வழங்கப்பட்டுள்ள வென்னுருவில் நிழற்றப்பட்டுள்ள பிரதேசத்தை தொடைக் குறிப்பீட்டில் எழுதுக.




12. மடக்கை வடிவில் தருக. $10^{0.3010} = 2$


13. முக்கோணி DBC இன் பரப்பளவு $15cm^2$ எனின் ABDE இணைகரத்தின் பரப்பளவக் காண்க.



14. வெற்றிடத்தை நிழற்றுக.

$X^2$ +.........+ 36 = ( $X$ +.........) $^2$

15. உருவில் தரவுகளைப் பயன்படுத்தி $x$ இன் பருமனைக் காண்க.




16. வகுப்பொன்றிலுள்ள மாணவர்களின் 14 பேர் கிரிகட் விளையாடுபவர்கள். 16 பேர் எல்லே விளையாடுபவர்கள். எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட ஒருவர் கிரிக்கட் விளையாடுபவராக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

17. நிமிடத்திற்கு 40 லீட்டர் வீதம் நீரை வெளியேற்றும் குழாயொன்றினூடாக 600 லீட்டர் கொள்ளளவுள்ள தாங்கியை நிரப்புவதற்கு எடுக்கும் காலத்தைக் காண்க.

18. தீர்க்காது $x+y$ இன் பெறுமானத்தைக் காண்க.

$3x + 4y = 13$

$2x + y = 2$


19. கீழே வழங்கப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (√) அடையாளத்தையும், பிழையாயின் (x) அடையாளத்தையும் இடுக.

i) இணைகரமொன்றின் எதிர்க்கோணங்களின் கூட்டுத்தொகை எல்லா சந்தர்ப்பங்களிலும் $180^0$ ஆகும் ( )

ii) முக்கோணியொன்றின் ஒரு பக்கத்தை நீட்ட உருவாகும் புறக்கோணமானது அகக்தெதிர்கோணங்களின் கூட்டுத்தொகையின் இரு மடங்காகும் ( )


iii) இரு சமாந்தரக் கோடுகளை ஒரு குறுக்கோடி சந்திக்கும் போது உருவாகும் நேயக்கோணங்கள் மிகை நிரப்பியாகும். ( )

20. ABCD என்பது ஒரு சாய்சதுரமாகும்.
AC = 16cm, BD =12 எனின் சாய்சதுரத்தின் பக்கமொன்றின் நீளத்தைக் காண்க.





21. $\sqrt{20}$ இன் பெறுமானம் எவ்விரு அடுத்துள்ள நிறை எண்களுக்கு இடையில் உள்ளது ?

22. ஆரை 7cm உடைய வட்டத்தின் பரிதி 44cm எனின் உருவின் சுற்றளவைக் காண்க.





23. உருவில் தரவுகளுக்கு ஏற்ப $x$ இன் பருமனைக் காண்க.




24 மாணவர்கள் 5 பேர் கணிப்பீட்டுப் பரீட்சையொன்றில் பெற்றுக்கொண்ட புள்ளிகள் கீழே வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் இடையத்தைக் காண்க.

22, 20, 18, 12, 18, 16

25. LM, LN நேர்கோடுகளிலிருந்து சமதூரத்திலுள்ள புள்ளியின் ஒழுக்கின் மீது L இலிருந்து 5cm தூரத்தில் P எனும் புள்ளியை ஒழுக்குகள் பற்றிய அறிவைப் பயன்படுத்திக் குறிக்க.



## பகுதி - B

01. மோகன் காணியொன்றை கொள்வளவு செய்வதற்கு தன்னிடமிருந்ந பணத்தின் $\frac{1}{4}$ பகுதியை செலவு செய்தான். அதில் கட்டிடமொன்றை நிர்மானிப்பதற்கு முழுப்பணத்தில் $\frac{7}{20}$ ஐ செலவு செய்தான்.

i. காணியை கொள்வனவு செய்வதற்கும், கட்டிடத்தை நிர்மானிப்பதற்கும் செலவு செய்த பணத்தை முழுப்பணத்தின் பின்னமாகத் தருக.

ii. காணியை கொள்வளவு செய்து கட்டிடத்தை நிர்மானித்தபின் மீதிப் பணத்தின் $\frac{1}{4}$ பகுதியை வியாபார நடவடிக்கைகளுக்காக செலவு செய்தார் எனின் வியாபார நடவடிக்கைகாக செலவு செய்த பணத்தை முழுப்பணத்தின் பின்னமாகத் தருக.

iii. மேலே செலவுகளின் பின் மீதிப்பணம் ரூபா 240 000. 00 எனின் மோகனிடமிருந்த மொத்த பணத்தொகையைக் காண்க.


Education கல்வி අධ්‍යාපන

iv. மோகன் வியாபாரத்திற்கு முதலீடு செய்த பணத்தொகையைக் காண்க.

---

02. மாணவனொருவன் பிறந்தநாள் வாழ்த்து மடலொன்றை நிர்மானிப்பதற்காக வெட்டி எடுக்கப்பட்ட மாதிரி ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளது. அது ஒரே அளவான 7cm ஆரையுடைய இரண்டு ஆரைச்சிறைகளையும் ஒரு செவ்வகத்தையும் கொண்டதாகும்.

i. AE வில்லின் நீளத்தைக் காண்க.





ii. வாழ்த்து மாடல் மாதிரியின் பரப்பளவைக் காண்க.

iii. வாழ்த்து மடல் மாதிரியைச் சுற்றி ஒரு நாடாவினால் அழகுபடுத்த தீர்மானிக்கப்பட்டதாயின் அதற்கு தேவையான நாடாவின் நீளத்தைக் காண்க.

iv. மேலே வாழ்த்து மடல் மாதிரியின் செவ்வகத்தினதும், ஆரைச்சிறைகளினதும் பரப்பளவுகளுக்கிடையிலான விகிதத்தை எளிய வடிவில் தருக.

---

03. சம்ராஸ் சைக்கிலொன்றில் தனது வீட்டிலிருந்து நகரத்திலுள்ள வியாபார நிலையமொன்றிற்கு சென்று மீண்டும் திரும்பிவந்த விதம் ஒரு புரணமற்ற தூர- நேர வரைபில் காட்டப்பட்டுள்ளது.





i. சம்ராஸ் வியாபார நிலையத்தில் செலவு செய்த காலம் எவ்வளவு?

ii. வீட்டிலிருந்து வியாபார நிலையத்திற்கு சென்ற கதியை கிலோ மீற்றர் மணிக்கு காண்க.

iii. வியாபார நிலையத்திலிருந்து மீண்டும் வீட்டைவந்தடைந்த கதி 24 $Kmh^{-1}$ எனின் அதற்குகாக எடுத்த காலத்தைக் காண்க.

iv. மேலே (iii) இல் மீண்டும் வீட்டைவந்தடைந்ததை தூர-நேர வரைபில் குறித்துக் காட்டுக.

04. பாடசாலையொன்றில் சிற்றுண்டி சாலையில் காலை உணவுக்காக மாணர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட உணவு தொடர்பான வட்ட வரைபு கீழே காட்டப்பட்டுள்ளது.




i. விற்பனை செய்யப்பட்ட இடியப்பத்திற்கான மையக்கோணத்தைக் காண்க.

ii. 45 மாணவர்கள் கடலை கொள்வனவு செய்தார்களாயின் அத்தினத்தில் சிற்றுண்டிசாலையில் உணவு கொள்வனவு செய்த மாணவர்களின் எண்ணிக்கையைக் காண்க.

iii. சோறு கொள்வனவு செய்த மாணவர்களின் எண்ணிக்கையைக் காண்க.

iv. உணவு கொள்வனவு செய்த 5 மாணவர்கள் தவருதலாக கடலை கொள்வனவு செய்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனாலும் அவர்கள் உண்மையில் கொள்வனவு செய்தது, இடியப்பமாகுமென பின்னர் தெரிய வந்நது. அதற்கு ஏற்ப புதிய திருத்ததின்படி கடலை கொள்வனவு செய்த மாணவர்களைக்காட்டும் ஆரைச்சிறையின் ஆரைச்சிறைக் கோணத்தைக் காண்க.

05.(a) வடிவிலும் அளவிலும் ஒரே வகையான தோடம் சுவையுடைய 3 மிட்டாய்களும் அப்பில் சுவையுடைய 2 மிட்டாய்களும் உள்ள பையொன்றிலிருந்து எழுமாறாக மிட்டாயொன்றை வெளியே எடுத்து பரீட்சித்தலின் போது.

i. மாதிரி வெளியை எழுதிக் காட்டுக.

ii. தோடம் சுவையுடைய மிட்டாயொன்று கிடைப்பதற்காக நிகழ்தகவைக் காண்க.

iii. தோடம் பழச்சுவை மிட்டாயொன்று கிடைக்காமைக்கான நிகழ்தகவைக் காண்க.

(b) ஒரு குறித்த வேலையை 6 மனிதர்கள் 4 நாட்களில் செய்து முடிப்பர்.

i. வேலையின் அளவுக்கான மனித நாட்களைக் காண்க.

ii. மேலே வேலையளவின் மும்மடங்கு வேலையை செய்து முடிப்பதற்கு 8 மனிதர்களுக்கு எடுக்கும் நாட்களின் எண்ணிக்கையைக் காண்க.

Education கல்வி அධ්‍යාපන

iii. மனித நாளொன்றுக்கான கூலி ரூபா 1000 எனின் மேலே (ii) இல் வேளையை செய்து முடிப்பதற்கான மொத்த கூலியைக் காண்க.

முழுப் பதிப்புரிமையுடைது / සියලුම හිමිකම් ඇවිරිණි / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் / Provincial Department of Education - NWP / வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் / Provincial Department of Education - NWP

**வடமேல் மாகாண கல்வித்திணைக்களம்**

**Provincial Department of Education - NWP**

**இரண்டாம் தவணைப் பரீட்சை - 2023**

**தரம் : 10**

சுட்டெண்.......................................... **கணிதம் / ගණිතය - II** நேரம்: 3 மணித்தியாலம் 10 நிமிடம்

- பகுதி A யிலிருந்து ஐந்து வினாக்களையும் பகுதி B யிலிருந்து ஐந்து வினாக்களையும் தெரிந்தெடுத்துப் பத்து வினாக்களுக்கு விடை எழுதுக.
- ஒவ்வொரு வினாவின் சரியான விடைக்கும் 10 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.
- அடியின் ஆரை r ஆகவும் உயரம் h ஆகவும் உள்ள உருளையொன்றின் கனவளவு $\pi r^2 h$ ஆகும்.

## **பகுதி** A

01. $y = -ax^2 + b$ வடிவிலான வரையொன்றை வரைவதற்கான பூரணமற்ற பெறுமான அட்டவணையொன்று காட்டப்பட்டுள்ளது

| $x$ | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|---|---|
| y | -4 | .................... | 4 | 5 | 4 | 1 | -4 |

i. அட்டவணையில் சமச்சீர் தன்மையைக்கொண்டு இடைவெளியை நிரப்புக.
ii. பொறுத்தமான அளவிடைக்கு சார்பின் வரைபை வரைக.
iii. சார்பின் திரும்பற்புள்ளியின் ஆள்கூறை எழுதுக.
iv. சார்பு நேரான $x$ இன் பெறுமான வீச்சை எழுதுக.
v. $y = -ax^2 + b$ வடிவில் வரைபின் சமன்பாட்டை எழுதுக.

---

02. ஒரு வியாபாரியின் வருட வருமானம் ரூபா 1 250 000 ஆகும். வருமானத்தின் முதல் 500 000 இற்கு வரிவிலக்காகும் அடுத்த ரூபா 500 000 இற்க 4% வருமான வரியும் அதற்கு அடுத்த ரூபா 500 000 இற்கு 8% வருமான வரியும் அறவிடப்படும்.


a. செலுத்த வேண்டிய மொத்த வருமான வரியைக் காண்க.
b. மேலே வியாபாரியின. மொத்த வருமானத்தின் அரைமடங்கை 2 வருடங்களுக்கு 8% வட்டி வழங்கும் வங்கியொன்றின் வைப்புச் செய்தார்.
i. இருவருட முடிவில் வியாபாரிக்கு கிடைக்கும் முழுத்தொகையைக் காண்க.
ii. இவ்வியாபாரி வருடத்திற்கு செலுத்தும் வருமான வரியானது, மேலே எளிய வட்டி வீதத்திற்கு வைப்புச்செய்துள்ள பணத்திற்கு வருடத்திங்கு கிடைக்கும் வட்டிக் தொகையிலும் குறைவானது எனக் காட்டுக.

---

03. a செவ்விள நீர் ஒன்றினதும் தோடம் பழம் இரண்டினதும் விலை ரூபா 200 ஆகும். தோடம் பழங்கள் 4 வாங்கக் கூடிய பணத்திற்கு 3 செவ்விள நீர்கள் வாங்கலாம்.
மேலே தகவல்களுக்கு ஏற்ப இரு ஒருங்கமை சமன்பாடுகளைத் தருக. அதனைத் தீர்ப்பதன் மூலம் செவ்விள நீர் ஒன்றினதும் தோடம்பழமொன்றினதும் விலைகளை வெவ்வேறாகக் காண்க.

b. சுருக்குக. $\dfrac{3}{x^2-1} - \dfrac{1}{x+1}$

04. உருவில் காட்டப்பட்டுள்ள செங்கோண முக்கோணியின் பரப்பளவு 38.5cm$^2$ எனின் $x$ சார்பான இருபடிச் சமன்பாடொன்றை கட்டியெழுப்புக. அதனைத் தீர்ப்பதன் மூலம் BC யின் நிளத்தைக் காண்க.




---

05. a i). $y = mx + c$ எனும் சூத்திரத்தில் $m$ ஐ எழுவாயாகத் தருக.

ii. $(x + y)^2 = x^2 + 2xy + y^2$ என்பது இருபடிக் கோவையின் விரிவாகும். அதனைப் பயன்படுத்தி, கீழே பிரசினத்தை தீர்க்க.

$x + y = 5$, $xy = 6$ ஆகும் போது $x^2 + y^2$ இன் பொறுமானத்தைக் கண்டு, $x, y$ பெறக்கூடிய நேர் நிறையெண்கள் இரண்டை எழுதிக்காட்டுக.

b. விமானியொருவன் A எனும் விமான நிலையத்திலிருந்து $050^0$ திசைகோளில 100 km தூரம் தனது விமானத்தை செலுத்தி, அவ்விடத்திலிருந்து $090^0$ திசைகோளில் மேலும் 100 km செலுத்தி B எனும் விமான நிலையத்தை சென்றடைந்தான்.

i). மேலே தகவல்களை ஒரு பரும்படிப்படத்தில் காட்டுக.

ii). பொறுத்தமான அளவிடைக்கு ஒரு அளவிடைப் படத்தை வரைக.

iii). B யிலிருந்து A யின் திசைகோளைக் காண்க.

---

06. 30 நாட்களைக் கொண்ட மாதமொன்றில் பாடசாலை புத்தகசாலையொன்றிலிருந்து வினியோகிக்கப்பட்ட புத்தகங்கள் தொடர்பான தகவல் கீழே அட்டவனையில் காட்டப்பட்டுள்ளது.

| புத்தகங்களின் எண்ணிக்கை | 15 - 19 | 20 - 24 | 25 - 29 | 30 - 34 | 35 - 39 | 40 - 44 |
|---|---|---|---|---|---|---|
| நாட்களின் எண்ணிக்கை | 2 | 3 | 9 | 7 | 6 | 3 |

i. ஆகார வகுப்பு யாது ?

ii. ஒரு நாளில் 30 அல்லது அதிலும் அதிகமான புத்தகங்கள் வினியோகிக்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கையைக் காண்க.

iii. இடைய வகுப்பைக் காண்க.

iv. புத்தகங்கள் 35 இலும் குறைவாக வினியோகிக்கப்பட்ட நாட்களை மொத்த நாட்களின் சதவீதமாகத் தருக.

## பகுதி - B

07. எண் அட்டைக் தொகுதியொன்றிலிருந்து எண் அட்டைகளை சுமிரா கீழே உள்ளவாறு ஒழுங்குபடுத்தினாள்.

2, 5, 8, 11, ..........................................................................

i. மேலே ஒழுங்கின் படி அடுத்து வரும் இரு உறுப்புக்களை எழுதுக.
ii. மேலே எண் கோலத்தின் பொது உறுப்பைக் காண்க.
iii. பொது வித்தியாசத்தைப் பயன்படுத்தி 50வது உறுப்பைக் காண்க.
iv. இக்கோலத்தின் 59 எத்தனையாவது உறுப்பாகும் ?
v. இக்கோலத்தில் 75, ஒரு உறுப்பாகுமா? காரணம் காட்டுக.

---


08. cm / mm அளவுள்ள நேர் விளிம்பையும் கவராயத்தையும் மாத்திரம் பயன்படுத்தி அமைப்புக் கோடுகளைக் தெளிவாகக் காட்டி அமைக்க.

i. $AB = 8$ cm , $B\hat{A}C = 90^0$, $AC = 6$ cm ஆகுமாறு முக்கோணி $A\hat{B}C$ யை அமைக்க.
ii. AC யின் செங்குத்து இரு கூராக்கியை அமைத்து,அது BC யை சந்திக்கும் புள்ளியை O எனக் குறிக்க.
iii. O வை மையமாகவும் , OB யை ஆரையாகவும் உடைய வட்டத்தை அமைக்க. அதன் விட்டத்தின் நீளத்தை அளந்து எழுதுக.
iv. AB, AC பக்கங்களைப்பயன்படுத்தி, BC பக்கத்தின் நீளத்தைக் கணித்து, மேலே (iii ) இல் பெற்ற விடையுடன் ஒப்பிடுக.

---

09. PQR இல் PQ = PR ஆகும். QA = RB ஆகுமாறு PR ஆனது B வரை நீட்டப்பட்டுள்ளது. அத்துடன் AC // PB ஆகும்.


i. உருவை பிரதிசெய்து தரவுகளைக் குறிக்க. முக்கோணி QAC ஒரு இருசமபக்க முக்கோணியென நிறுவுக.
ii. ACBR ஒரு இணைகரமெனக் காட்டுக.




---

10. நாற்பக்கல் ABCD யில் AC , BD என்பன மூலைவிட்டங்களாகும். அவை T இல் இடைவெட்டுகின்றன. AB = DC, AC = BC ஆகும்.

i. உருவை பிரதி செய்து தரவுகளை அதில் குறிக்ச
ii. $\Delta ABD \equiv \Delta ACD$ என நிறுவுக.
iii. $B\hat{A}D = C\hat{D}A$ எனக் காட்டுக.
iv. BT = TC எனக் காட்டுக.



11. i. கீழே மடக்கைச் சமன்பாட்டை தீர்க்க.

$$\lg x + \lg 2 = \lg 16 - \lg 4$$


ii. மடக்கை அட்டவனையைப் பயன்படுத்தி சுருக்கி விடையை முதலாம் தசமதானத்திற்கு காண்க.

$$\frac{125.4 \times 5.31}{12.5}$$

---

12. கலவன் பாடசாலையொன்றில் 45 மாணவர்களில் 7 பேர் இடது கையால் எழுதுபவர்கள், 25 பேர் பெண்பிள்ளைகளாவர் வலது கையால் எழுதும் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை 18 ஆகும்.

i. தகவல்களை வென்னுருவை பிரதி செய்து குறிக்க.




ii. இடது கையால் எழுதும் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையைக் காண்க.
iii. வலது கையால் எழுதுபவர்களின் எண்ணிக்கையைக் காண்க.
iv. வென்னுருவில் $A^1 \cap B$ பிரதேசத்தை நிழற்றுக. அப்பிரதேசத்தை வாக்கியத்தில் விளக்குக.
v. மேலே மாணவர்களில் தெரிவுசெய்யப்பட்ட ஒருவர் இடது கையால் எழுதும் ஒரு பெண் பிள்ளையாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)

**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**



கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page